1969 செப்டம்பர் 12]

வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இருக்கின்ற ஸ்டாக்கைக் கணக்கில் எடுத்து, காலதாமதம் இல்லாமல், ஒரு வாரத்திற்கு முன்னதாகவே வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏறக்குறைய ஒரு வாரத்திற்கு முன்பாகத்தான் அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அப்படித்தான் விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஏதாவது காலதாமதம் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதுபற்றிக் கவனிக்கலாம்.

சிதம்பரம் நகரில் கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம்

* 248 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

சிதம்பரம் டவுனில் வாடகை கட்டடத்தில் இருக்கும் கால்நடை மருத்துவ மனைக்கு அரசாங்க கட்டடம் கட்ட திட்டமுண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை, ஐயா.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சிதம்பரம் தாலுகா பெரிய தாலுகா. அதிலும் பெரிய முனிசிபாலிடி. ஏராளமான கால்நடைகள் இருக்கின்றன. இப்போது இருக்கும் வாடகைக் கட்டடம் சிறு கட்டடமாக இருக்கிறது. ஆகவே, நல்ல ஒரு கட்டடத்தைக் கட்டி கால்நடைகளின் உபயோகத்திற்குக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நகராட்சிப் பகுதிகளில் கால்நடை மருந்தகம் கட்டுவதற்கு மானியமோ அல்லது கடனோ அரசு வழங்குவது இல்லை. கிராமப் புறங்களில் கட்டுவதற்குத்தான் 30,000 ரூபாய் வரை வேளாண்மைத் துறையின்கீழ் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, நகராட்சிப் பகுதிகளில் அந்தந்த நகராட்சியின் நிதிநிலையைப் பொருத்து அவர்களே கட்டடங்களைக் கட்டிக் கொள்ளலாம்.

Vaigai Irrigation Scheme.

* 249 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) Whether the Vaigai Irrigation Scheme has been remodelled ;

(b) if so, at what cost ; and

(c) what are its special features?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மன்றத்தின் முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

* 174-175-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1969 செப்டம்பர் 12

திரு. கே. விநாயகம் : திருத்தியமைக்கப்பட்ட வைகை இரிகே ஷன் ஸ்கீமில் திருமங்கலம் வாய்க்கால் என்று இருக்கிறது. ஆனால் திருமங்கலத்திற்கு அந்த வாய்க்கால் போவது இல்லை. திருமங் கலத்திற்குப் போகாத அந்த வாய்க்காலுக்கு ஏன் அந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது ? ஆகவே, பெயரைத் திருத்தியமைப் பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெயரை மாற்றச் சொல்லு கிறீர்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதே மன்றத்தில் சில நாட்களுக்கு முன்னால் கனம் உறுப்பினர் திரு. சித்தன் அவர் கள் கேட்ட கேள்விக்கு ஏற்கனவே நான் பதில் அளித்திருக்கிறேன். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் வெள் ளாடு என்ற பெயர் இருந்தாலும் அவை கறுப்பாகவும் இருக் கின்றன. அந்த வாய்க்கால் திருமங்கலத்தை நோக்கிச் செல்லும் காரணத்தால் அந்தப் பெயர்.

திரு. நா. காசிராமன் : வைகைப் பாசன வசதியைப் புதுப்பிப் பதற்கு முன்னால் அந்தப் பாசன வசதியைக் கொண்டு எத்தனை ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டன ? புதுப்பித்த பிறகு எத்தனை ஏக்கர் நிலங்கள் பயன் அடைந்திருக்கின்றன ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The scheme will bridge a gap of 10,000 acres and ensure stabilised supplies to 95,882 acres of existing irrigation.

மற்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

திரு. கரு. சீமைச்சாமி : வைகைக் கால்வாய்த் திட்டச் சீரமைப்பு வேலையின் கீழ் விரகனூரில் எந்தவிதமான வேலையும் நடக்கவில்லை. இதிலே காலதாமதத்திற்குக் காரணம் என்ன ? வைகைப் பாசனச் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் கிழக்கு இராம நாதபுரம் பிராந்தியத்திற்குப் பாசன வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : திருமங்கலம் தாலுகா ஒவ்வொரு ஆண்டும் பருவ மழை பொய்க்கின்ற வறட்சியான தாலுகாவாக இருக்கிறது. இதுவரை இல்லாவிட்டாலும் வைகைக் கால்வாய் சீரமைக்கப்படுவதால் இனியாவது திருமங்கலம் கால்வாய் வரை போக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சாத்தியமானால் அது பற்றிப் பரிசீலிக்கலாம்.